DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, VANUR.

Calender - C.C.No. 20/2019
Miscellaneous -

Sessions -

Deposition of witness for PW1
Defence

Name : Ravichandiran

Father Name /
Husband Name :

Village :

Taluk :

Caste : -

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of 02nd March 2026.

எதிரி ஆஜர்.

குறுக்கு விசாரணை

நான் தங்கவேல் பைனான்ஸ நிறுவனத்தை 2017லிருந்து நடத்திவருகிறேன். அதற்கான உரிமத்தை பெற்றுள்ளேனா என்றால் பெற்றுள்ளேன். எங்கள் நிறுவனத்தில் யார் யாருக்கு கடன் கொடுக்க வேண்டுமென்று விதிமுறைகள்

உள்ளது. அந்த விதிமுறைகளை ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

எதிரி அரசு வேலையில் இருந்து ஓய்வு பெற்றவர் என்ற விவரம் தெரியுமா என்றால் என்னிடம் கடன் கேட்க வரும்போது அவ்வாறு எதுவும் சொல்லவில்லை. எதிரி நேரில் எனது அலுவலகத்திற்கு வந்து கடன் கேட்டார். ஏஜண்ட் மூலமாக வரவில்லை.

எதிரி எந்த தேதியில் என்னிடம் கடன் கேட்க வந்தார் என்று எனது புகாரிலோ பிரமாண் வாக்குமூலத்திலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. பொதுவாக என்னிடம் கடன் கேட்க வருபவர்களிடம் அவர்களிடமிருந்து பிராமசரி நோட்டும் ஆதார் அடடையும் பெற்று கொண்டு கடன் கொடுப்பேன்.

அதன் அடிப்படையில் எதரியின் வங்கி கணக்கில் NEFT மூலமாக பணத்தை கொடுத்தேன். எதிரிக்கு நான் கொடுத்ததாக சொல்லப்படும் பணத்திற்கு மாதம் எவ்வளவு டியு பெற்றேன் என்றால் எதிரி எனக்கு பணம் எதுவும் கொடுக்காததால் அதைகுறித்து எனது புகாரிலோ பிரமாண வாக்குமூலத்திலோ நான் குறிப்பிடவில்லை.

எதிரி என்னிடம் பெற்ற கடனை மாதம் மாதம் செலுத்தவில்லை என்று ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன். எதிரி பெற்ற பணத்திற்கு 12 சதவீதம் வட்டி என்று குறிப்பிட்டுள்ள நிலையல் அந்த வட்டி மாதம் கொடுக்க வேண்டிய பணத்திற்கா அல்லது மொத்தமாக பெற்ற பணத்திற்காக என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இவ்வழக்கில் வட்டி சேர்த்து வழக்கில் பரிகாரம் கோரப்படவில்லை.

எதிரி தனது குடும்ப செலவிற்காக என்னிடம் பணம் கடனாக கேட்டார். இந்த விவரத்தை நான் எனது எனது புகாரிலும் பிரமாண வாக்குமூலத்திலும் குறிப்பிட்டுள்ளேன். எதிரியிடமிருந்த பெற்ற பிராமசரி நோட்டை ஆவணமாக தாக்கல் செய்தேனா என்றால் காசோலை மோசடி வழக்கு என்பதால் அதை ஆவணமாக நான் தாக்கல் செய்யவில்லை.

எதிரி ஏற்கனவே எஸ்பிஐ வங்கியில் கணக்கு வைத்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எதிரி ஏற்கனவே எஸ்பிஐ வங்கியில் கணக்கு வைத்துள்ள்ளர் என்பதை தெரிந்தும் அவரை வில்லியனூர் கரூர் வைசியா வங்கியில் கணக்கு தொடங்கி ஏஜண்ட் மூலமாக பணத்தை செலுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல.

எதிரிக்கு கரூர் வைசியா வங்கியில் வங்கி கணக்கு இல்லை என்றாலும் அவர் பிராமசரி நோட மற்றும் ஆதார் அட்டையில் கையொப்பம் செய்ததை வைத்து கரூர் வைசியா வங்கியில் நாங்களே எதிரிக்கு வங்கி கணக்கை தவறுதலாக ஆரம்பித்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரி கடன் பெறும்போதே வங்கி கணக்கு விவரங்களை ஆதாரமாக கொடுத்தால் தான் அதன் அடிப்படையில் NEFT மூலமாக பணத்தை செலுத்துவோம்.

வழக்கு காசோலையை எதிரி அவர் கையொப்பம் இட்டு கொடுத்தார் அதிலுள்ள விவரங்களை என்னுடைய பணியாளர் எதிரி சொன்னதன் பேரில் நிரப்பினார்.

எதிரி மாத தவணை செலுத்தாததை குறித்து நேரில் சென்று கேட்டேனா அல்லது போன் மூலமாக கேட்டேனா என்றால் மூன்று மாதம் நேரில் சென்று கேட்டேன். 4ம் மாதம் தான் எதிரி வழக்கு காசோலையை கொடுத்தார். எதிரியிடம் நான் நேரில் சென்று கேட்டேன்.

எதிரி கொடுத்த பிராமசரி நோட்டை வைத்து வேறு நீதிமன்றத்தில் சிவில் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிரிக்கு கொடுத்த பணத்திற்காக மாத தவணை செலுத்ததால் நான் நேரில் சென்று எதிரியை திட்டி அடுத்த மாதமே இந்த வழக்கை தாக்கல் செய்துவிட்டேன் என்றால் சரியல்ல. 4மாத தவணையின்போதுதான் எதிரிக்கு எனக்கு காசோலையை கொடுத்தார்.

எதிரி ஓய்வு பெற்ற அரசாங்க ஊரியா என்பதால் அவருக்கு வரும் ஓய்வுதியத்தை வைத்து எனக்கு செலுத்த வேண்டிய மாத தவணையை சரிவர செலுத்திவிட்டார் என்றாலும் ஆனால் நான் அவருக்கு பணத்தை பெற்றுக்கொண்டு கொடுக்கவேண்டிய ரசீதை கொடுக்கவில்லை என்றாலும்

சரியல்ல. எதிரி என்னிடம் பெற்ற கடனுக்கு மாத தவணை எதுவும் செலுத்ததால் ரசீதும் எதுவும் கொடுக்கப்படவில்லை. எதிரி மாத தவணை சரிவர செலுத்திவிட்டார் என்றாலும் அவ்வாறு செலுத்தவில்லை என்று எதிரி மீது தவறாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மாதம் மாதம் தவணை செலுத்ததால் எதிரியை சென்று கேட்டபிறகு எதிரிக்கு அறிவிப்பு எதுவும் அனுப்பினேனா என்றால் எங்கள் நிறுவனத்தில் அவ்வாறு பழக்கம் எதுவும் இல்லை. எதிரி என்னிடம் பெற்ற பணத்தை திருப்பி கொடுத்துவிட்டார் என்றாலும் அதற்கு நான் அவருக்கு நான் ரசீது எதுவும் கொடுக்காமல் அவர் வயதானவர் என்பதால் அவரை அலைக்கழீக்கும் எண்ணத்திலும் அவரிமிருந்து அதீத வட்டி பெற்று எண்ணத்திலும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

இவ்வழக்கு சட்டரீதியாக நிலைக்கத்தக்கதலல் என்றாலும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டியது என்றாலும் சரியல்ல.

ஒம்/- என்.பிரீத்தி,

நீதித்துறை நடுவர்,

வானூர்.